Registered as a Newspaper
23-9-1993

# உதயன்

விலை ரூபா 5-00

திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 08 வெள்ளிக்கிழமை (24-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 300

# ஸ்ரீலங்கா கடற்படைத்தாக்குதலால் தமிழகத்தில் போராட்டம் வெடிக்கும்

## மத்திய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கிறார் முதல்வர் ஜெயலலிதா

சென்னை, செப்டெம்பர் 24

ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழக மீனவர் மீது நடத்தும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தமிழகத்தில் பெரும் போராட்டம் வெடிக்கும்

இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக செல்வி ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவுக்கு கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்திருக்கிறார்.

தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்தும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறுமாறு அந்தக் கடிதத்தில் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழக மீனவர் மீது தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இது குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், தமிழகம் பார்த்துக் கொண்டிருக்காது. தமிழக மக்கள் போராட்டங்களில் குதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்—

இந்த மாதம் முதல் வாரத்தில் மட்டும் தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் சம்பவங்கள் மூன்று இடம்பெற்றன.

இந்திய — இலங்கை கடல் எல்லையில் சர்வதேச நீர்ப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு ஊர்தி வன்னிப்பகுதியில்பவனி

தியாகி திலீபன் நினைவாக வன்னி மாவட்டத்திலும் ஊர்தி பவனிகள் இடம் பெற்று வருகின்றன.

தாண்டிக்குளம், ஓமந்தை, புளியங்குளம், மாங்குளம், பனிச்சங்குளம், துணுக்காய் ஆகிய இடங்களினூடாக திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி நேற்று சென்றது.

ஊர்தி சென்ற வீதிகளின் இருமருங்கிலும் மக்கள் கூடி நின்று தியாகியின் உருவப் படத்துக்கு மலரஞ்சலி செய்தனர். மாங்குளம் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட தேங்காய்களை உடைத்தும் மக்கள் வீரவணக்கம் செலுத்தினர்.

நேற்றுப் புறப்பட்ட ஊர்திப் பவனி கிளிநொச்சிப் பகுதிக்கும் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## சிற்றூர்தி ஊழியர்கள் இன்று உண்ணாவிரதம்

### மினி பஸ் சேவை இல்லை

யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் மூன்று இடங்களில் சிற்றூர்தி ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் இன்று தியாகி திலீபன் நினைவாக உண்ணாவிரதம் மேற்கொள்வர்.

வலிகாமத்தில் —

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து மோட்டார் முச்சக்கர வண்டி சேவைச் சங்கத்தினர் இரட்டைத் தூக்குக் காவடியுடன் காலை 7 மணிக்கு ஊர்வலமாகச் சென்று நல்லூர் உண்ணாவிரதப் பந்தலிலும்,

வடமராட்சியில் —

நெல்லியடிச் சந்தியில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு கரவெட்டி வட்டவையில் அரசடி உண்ணாவிரதப் பந்தலிலும்,

தென்மராட்சியில் —

சாவகச்சேரியில் இருந்து ஊர்வலமாகச் சென்று நுணாவில் உண்ணாவிரதப்பந்தலிலும்— அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்வர்.

இவ் உண்ணாவிரதத்தை யொட்டி இன்று குடாநாட்டில் மினிபஸ் சேவைகள் நடைபெறமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

## கிழக்கில் படையினர் நடவடிக்கை

# வெருகல் ஆற்றுப் பகுதியில் கடும் சண்டை தொடர்கிறது

கொழும்பு, செப். 24

கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் ஆற்றுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பயங்கர மோதல் இடம்பெற்று வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா படையினருடன் கடும் சமரில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும்—

இராணுவத்தினர் தரப்பிலும் பல அணிகள் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ளன என்றும் கிழக்குப் பிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தெரிவித்தார்.

நேற்றும் வெருகல் ஆற்றுப் பகுதியில் மிக உக்கிரமான

(2 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப் 24

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான கப்டன் மிரேஸ் (குலவீரசிங்கம் தேவபாலன்— மீசாலை தெற்கு) என்பவர் வீரச்சாவடைந்தார்.

கப்டன் மிரேஸின் வித்துடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு மீசாலை வடற்கரை லிங்கேஸ் படிப்பகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் அங்கு நடைபெறும் வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து அவரது வித்துடல் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்படும். (இ-5)

## 'குமண' கப்பல் இன்று புறப்பாடு

யாழ்ப்பாணம், செப். 24

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'குமண' கப்பல் இன்று திருகோணமலைக்குச் செல்லவிருக்கிறது.

அரச உத்தியோகத்தர்களுடன் இன்று திருகோணமலை புறப்படும் 'குமண', கொழும்பில் சிகிச்சை பெற்று திரும்புவோரை ஏற்றிக்கொண்டு நாளை மறுதினம் மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து சேரும். (ஒ-3)

# திலீபனுக்கு அஞ்சலிசெலுத்த மக்கள் எழுச்சியுடன் பங்கேற்பு

யாழ்ப்பாணம், செப். 24

தியாகி திலீபனின் ஒன்பதாம் நாள் நினைவு நிகழ்வுகள் நேற்று தமிழீழப் பகுதிகள் எங்கும் சிறப்பாக நடைபெற்றன. வழமை போலவே மக்கள் எழுச்சியுடனும் உணர்வு பூர்வமாகவும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளைவிட மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தும் பொருட்டு புதியனவற்றை மேலதிகமாகச் சேர்த்துக் கொள்வதைப் பல இடங்களிலும் அவதானிக்க முடிந்தது.

நல்லூரில் உள்ள நினைவுத் தூபியில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. வளநாடன் ஈகைச்சுடரை ஏற்ற, நல்லூர் வட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி வேணு மலர்மாலை அணிவித்தார்.

காலை 7.30 மணிக்கு நல்லூர் உண்ணாவிரதப் பந்தலில் தியாகியின் திருவுருவப் படத்திற்கு திரு. வளநாடன் ஈகைச் சுடரேற்ற யாழ். வட்டப் பொறுப்பாளர் திரு. செந்தமிழன் மலர்மாலை அணிவித்தார்.

நேற்றைய உண்ணாவிரதத்தில் அரியாலை தெற்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், ஊழியர்கள், நீராவியடி சனசமூக நிலையம், பொம்மை வெளி சனசமூக நிலையம் [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு—கிழக்கு பிரச்சினை: ராணுவத்தீர்வு காணக்கூடாது

### ஹமீத் கூறுகின்றார்

"நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வு காணப்படக் கூடாது. பரஸ்பரம் நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட்டு பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்."

வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் முன்கண்டவாறு கூறியுள்ளார்.

கடந்த வாரம் அக்குறணைப் பகுதியில் நடந்த உபதபால் நிலையம் ஒன்றின் திறப்பு விழா நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியிருப்பதாவது:-

வடக்கு, கிழக்கு பிரச்சினையை அரசு ஆயுத முனையில் அணுகுவது ஒருபோது நன்மை அளிக்காது. இனப் பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்துள்ளமையினால் வளர்முக நாடுகளின் வரிசையில் உள்ள இலங்கை பெரும் தாக்கத்தை எதிர் நோக்கியுள்ளது — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## கடந்த மாதம் மட்டும் 109 ராணுவ நடவடிக்கைகள்

### சபையில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

கடந்த மாதத்தில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் 109 இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தை முடித்துவைத்துப் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது—

பொதுமக்களுக்கு கஷ்டங்களைக் கொடுக்காமல் தீவிரவாதத்தை அடக்கும்படி பாதுகாப்புப் படையினருக்கு ஜனாதிபதி விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 12 — 08 — 1917

இறப்பு: 08 — 10 — 1989

### இராமலிங்கம் தம்பிப்பிள்ளை

இளைப்பாறிய ஆசிரியர் [புங்குடுதீவு — 1]

திதி:- 24 — 09 — 1993

பல ஆண்டு ஆனாலும் — நீண்ட
பெரு வாழ்வு வாழ்வீர் என்றிருந்தோம்
எம்மை ஆளாக்கி வைத்தவரை இன்றும்
நினைத்து மனம் ஏங்கித் தவிக்கின்றோம்.
எம்மைப் பிரிந்து நான்கு ஆண்டுகளானாலும்
என்றும் உங்கள் நினைவுகள் மாறா.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (27416)

## நிக்கிரி வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், செப். 24

பருத்தித்துறைக்கு இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட 'நிக்கிரி' கப்பல் வருவது தாமதமாகும் என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிக்கொண்டு கடந்த புதன் கிழமை 'நிக்கிரி', கொழும்பில் இருந்து புறப்படும் என யாழ் அரச அதிபர் செயலகத்துக்கு அறிவித்திருந்தார்.

ஆனால் கொழும்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், கப்பலில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் தடைப்பட்டுள்ளன. (ஓ-3)

## இஸ்ரவேல் நாடாளுமன்றம் அங்கீகாரம்

ஜெருசலம், செப். 24

அரபாத் - ரபீன் சமாதான ஒப்பந்தத்தை இஸ்ரேலிய நாடாளுமன்றம் நேற்று 11 பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரித்தது.

ஆதரவாக 61 எம்பிக்களும் எதிராக 50 எம்பிக்களும் வாக்களித்தனர். 9 எம்பிக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. [இ எ]

## வெருகல் ஆற்றும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சண்டை இடம்பெற்றதாகவும், அந்தப்பகுதியில் தொடர்ந்து பெரும் குண்டு வெடிப்புப்புச் சத்தங்கள் கேட்டபடி இருக்கின்றன எனவும் ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன. (ஓ-6)

## தனியார் கல்வி நிறுவன

நிர்வாகிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ். மாவட்டம் விடுக்கும் ஓர் முக்கிய அறிவித்தல்

இந்தியப்படை நம் தமிழ் இன மக்களுக்கு இழைத்த கொடுமைகளை தாங்காது துயர் கொண்டு எம் மக்களுக்காக, எம் மண்ணுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து 15 — 09 — 1987 தொடக்கம் 26 — 09 — 1987 வரை நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியிலே உண்ணாவிரதமிருந்து சாவடைந்த தியாகி லெப். கேணல் திலீபனின் 6 ஆம் ஆண்டு நிறைவு நினைவு கூரும் முகமாக நாளை 25-09-1993 சனிக்கிழமை சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் மூடி நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் நல்லூர் வீதியில் நடைபெறு உண்ணாவிரதத்திற்கு காலை 7-30 மணிக்கு சமூகம் அளிக்குமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம். (சி/5962)


# அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைந்த விவசாயத் திட்டம்

## 1993/94

யாழ். குடாநாட்டில் விவசாயத் திட்டங்களில் உதவி வழங்கும் நோக்கில் மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தின் கருத்துரைக்கமைவாக கீழ குறிப்பிடப்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்க அதிபர், இணைக்கள அதிகாரிகளின் உதவியுடனும், தனித்தும் விவசாய உள்ளீடுகளை தருவித்துள்ளனர்.

பங்குபற்றும் நிறுவனங்கள் — 'ஊற்று' நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உலர்வலய அபிவிருத்தி மன்றம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், மக்கள் நலன்காக்கும் பிரிவு, அறவழிப் போராட்டக் குழு, சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ)

யாழ். குடாநாட்டின் ஒருங்கிணைந்த விவசாயத் திட்டத்தின் முக்கிய கட்டங்கள்

- ✶ காலபோக நெற்செய்கை
- ✶ காலபோக சிறுதானியம், மரக்கறி, கிழங்குவகை செய்கை
- ✶ சிறுபோக மரக்கறி, கிழங்குவகை, சிறுதானியங்கள் செய்கை

மேற்படி திட்டங்களில் 10,000 விவசாயிகள் மட்டுமே பயன்பெற உள்ளனர்.

### இத்திட்டங்களில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா? அல்லது மேலதிக உற்பத்தியில் ஈடுபட ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

குறைந்த எரிபொருளில் அல்லது எரிபொருள் இல்லாமல் பயிர் செய்யவும், உங்கள் குடும்பத்துக்கு வருமானம் பெறவும், உள்நாட்டில் உற்பத்தியை பெருக்கவும் மேலுமொரு திட்டம்.

✶ காலபோக மானாவாரி சிறுதானியச் செய்கை.

எதிர்வரும் 'பருவமழை'க் காலத்தில் மானாவாரியாக சிறுதானியங்கள் உற்பத்தி செய்யக்கூடிய வடமராட்சி கிழக்கு தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி விவசாயிகளே, நம்பிக்கையுடன் உற்பத்தியில் பங்கு பற்றுங்கள்.

- ✶ அரசசார்பற்ற நிறுவனங்கள் கடனடிப்படையில் அல்லது குறைந்த விலையில் விதை தானியங்களையும், உரம் என்பவற்றையும் வழங்கத் தயாராக உள்ளன
- ✶ இயற்கை 90 வீதமான நீர்ப்பாசன வசதிகளை செய்துதரத் தயாராக உள்ளது.
- ✶ இயற்கை வழங்கும் நீர்ப்பாசன வசதிகளுக்கு மேலாக நீர்ப்பாசன வசதிகள் தேவைப்படும் கட்டத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்க அரசாங்க அதிபர் சம்மதித்துள்ளார்.
- ✶ மாவட்ட விவசாயக் குழு, உற்பத்தியாகும் தானியங்களை நியாய விலையில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.
- ✶ சமூகம் உங்களை சாதனையாளராகக் கௌரவிக்கும்.

மேலும் காலத்தை தாமதமாக்காதீர்கள். குறிப்பிட்ட பயனாளிகளுக்கே உதவிகள் பெற வாய்ப்புள்ளமையால்; தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி பகுதியில் மானாவாரியாக சோளம், நிலக்கடலை, கௌபி, பயறு, உழுந்து பயிரிட விரும்பும் விவசாயிகள் உங்கள் கிராமசேவகர்களுடாக பிரதேச செயலருக்கு செய்கை பண்ணும் பரப்பளவு, பயிர், தேவைப்படும் உள்ளீடுகள் விபரத்தை வழங்குங்கள்.

மேலதிக தகவல்களுக்கு திட்டத்தை செயல்படுத்தவுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளலாம்.

அறவழி போராட்டக் குழு — தென்மராட்சி
'ஊற்று' நிறுவனம் — தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் — வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி

**விவசாய ஒருங்கிணைப்புக் குழு,**
அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
100, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினை;

# நோர்வேயின் மத்தியஸ்தம் கோரி பல்கலைக்கழக மட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 24

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நடைமுறைச் சாத்தியமான உடன்பாடு ஒன்றைக் காண நோர்வே மத்தியஸ்தம் வகிக்க அந்நாட்டு அரசை தூண்டவும்—

தீர்வுக்கான முன்னோடி முயற்சிகளில் கல்விமான்கள் ஈடுபடவும்— உதவும் வகையில் நோர்வே 'ரொம்சோ' பல்கலைக்கழகத்தில் ஆரம்ப பேச்சுக்கள் விரைவில் நடைபெறவிருக்கின்றன.

நோர்வே ரொம்சோ பல்கலைக்கழகத்துக்கும் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் அடிப்படையில் இந்தப் பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நோர்வே ரொம்சோ பல்கலைக்கழகத்தின் உப-வேந்தர் பேராசிரியர் ஒல்வி டி. மேஸ் ஆகியோருக்கு இடையில் யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடித்துறை ஆரம்பிப்பது தொடர்பாக உடன்பாடு ஒன்று அண்மையில் கைச்சாத்திடப் பட்டது தெரிந்ததே.

இந்த உடன்பாட்டில் இரண்டாவது அம்சமாக இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றிய விடயம் அடங்கியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான அடிப்படைத் தேவையான விடயங்கள் குறித்து நோர்வே ரொம்சோ பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் ஆரம்பப் பேச்சுக்களில் ரொம்சோ பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம், சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் இலங்கை பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த கல்விமான்கள் பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ரொம்சோ பல்கலைக்கழகம் இது விடயம் தொடர்பான அனுமதியை நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சிடம் கோரவிருப்பதாகவும்- அதன்பின் இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் கோரவிருப்பதாகவும்- தெரிவிக்கப்பட்டது. (த-3)

## வெட்டு புள்ளிகள் தயாரிக்கும் பணிகள் நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், செப். 24

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் தயாரிக்கும் பணிகள் தற்சமயம் நடைபெறுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழக அனுமதியில் உள்ள இடைவெளிக் காலத்தை நிவர்த்தி செய்யும் வகையில் 92ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றியவர்களை எதிர்வரும் பெப்ரவரியில் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

91ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் தயாராகியுள்ளதாகவும்—

அதில் சில திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளதால் அவற்றை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் —

அடுத்த மாதம் பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்கள் ஆரம்பிக்க வசதியாக விரைவில் வெட்டுப்புள்ளி விபரங்கள் வெளியாகும் என்றும் — கொழும்பு தகவல்கள் மேலும் தெரிவித்தன. (த-3)

### வீதி புனரமைப்பு

அராலி மேற்கு புங்கங்குளி கிராமத்துக்குச் செல்லும் வீதியை புங்கங்குளி நல்லொளி சனசமூக நிலையத்தினர் கிராம மக்களின் உதவியுடன் சிரமதான முறையில் செப்பனிட்டுள்ளனர். (க-12)

### பூவரச மரங்கள் திருட்டு

கல்லுண்டாய் வீதி, அராலி கடற்கரையோரம் ஆகியவற்றின் அருகில் உள்ள பூவரச மரங்கள் இரவில் களவாக வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றன. (க-12)

அரச அலுவலகத்தில் இருந்த

# முடியாட்சிச் சின்னங்களை அகற்றும்படி உத்தரவு!

கொழும்பு, செப். 24

கொழும்பில் உள்ள அதி உயர் அரச அலுவலகத்தில் இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த முடியாட்சியைப் பிரதிபலிக்கும் சின்னங்கள் அகற்றப்பட்டு விட்டன.

அந்த அலுவலகத்தின் தலைமைப் பதவியில் முன்னர் இருந்தவர் இச்சின்னங்களை பயன்படுத்தி வந்தால் புதிதாக தலைமைப் பதவிக்கு வந்துள்ளவரின் உத்தரவின் கீழ் இவை தற்போது அகற்றப்பட்டுள்ளன என்று "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வலுவலகத்தில் பணிபுரியும் பியோன்கள் முந்திய தலைவரின் உத்தரவின் கீழ், முடியாட்சியைப் பிரதிபலிக்கக் கூடியதான தலைப்பாகை மற்றும் சின்னங்களை உடுத்தி வந்தனர்.

அலுவலக சிற்றூழியர் என்ற பதவிப் பெயருக்குப் பதிலாக ஆராய்ச்சி, மொஹொத்தல Mohottala) போன்ற பதவிப் பெயர்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

ராஜபரம்பரையைப் பிரதிபலித்து வந்த இச்சின்னங்களை உடனடியாக அகற்றும்படி தற்போதைய தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய அரச அலுவலகங்களில் சிற்றூழியர்கள் எப்படி பணிபுரிகிறார்களோ அவ்வாறே தமது அலுவலக சிற்றூழியர்களின் உடைகளும் அவர்களின் பதவிப் பெயர்களும் இருக்க வேண்டும் என்று புதிய தலைவர் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவு ஊழியர்களுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது. (த-எ)

★ வடக்கு - கிழக்கில்

# 44 பிரதேச செயலகங்கள் நிறுவப்பட வேண்டும்

நாடு முழுவதும் இதுவரை 225 பிரதேச செயலகங்கள் நிறுவப்பட்டுள்ளன வடக்கு-கிழக்கில் இன்னும் 44 பிரதேச செயலகங்கள் நிறுவப்பட வேண்டியிருக்கிறது

— உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இத்தகவலை வெளியிட்டார்

பிரதேச சபைகளைத் திருத்தவும், அவற்றை அபிவிருத்தி செய்வதற்குமான குறைநிரப்புப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள கிராமசேவையாளர்களின் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்றும் அவர் சொன்னார். (உ-9)

# தியாகச் சுடர் திலீபன் நினைவாக நாளை நடைபெறும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 24

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டி குடாநாட்டில் பரவலாக அடையாள உண்ணாவிரதங்கள் மற்றும் சிரமதானங்கள் இடம்பெற்று வருகின்றன.

தியாகி திலீபனின் உண்ணாநோன்பின் 11ஆம் நாளான நாளை அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

**வலிகாமத்தில்**

★ சங்கானை — அரசடி வைரவர் கோவிலடியில், வட்டு. சிற்றூர் மக்கள்.

★ கோப்பாய் — நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் கோயில் முன்றிலில், கோப்பாய் வர்த்தகர் சங்கம்.

★ சண்டிலிப்பாய் — முத்தவிநாயகர் கோயில் முன்றிலில் மானிப்பாய் சிற்றூர் முகாம் மக்கள்.

★ உடுவில்/தெல்லிப்பழை — சுன்னாகம் சிவன் கோயில் முன்றலில் வர்த்தகர் சங்க ஊழியர் சங்கம்.

★ யாழ்ப்பாணம் — நல்லூர் — கந்தசுவாமி கோயில் வீதியில் சுண்டிக்குளி சிற்றூர் மக்கள், கொக்குவில்/கந்தர்மடம் மக்கள்.

**வடமராட்சியில்**

★ கரவெட்டி — சாமியன் அரசடி, நெல்லியடி கிழக்கு தெங்.வர் சங்கம், துன்னாலை கிழக்கு-தெற்கு சிற்றூர் மக்கள்.

★ உடுப்பிட்டி—உடுப்பிட்டி மந்தி வைரவர் கோயிலடியில் கரணவாய் (வடக்கு/மேற்கு சமரபாகு சிற்றூர் மக்கள்.

★ பருத்தித்துறை — அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலடியில் அல்வாய் மேற்கு, வட/மேற்கு சிற்றூர் மக்கள்.

**தென்மராட்சியில்**

★ பளை—பளை பிரதேச சபை முன்றலில் தெ.ப. பொ. உ. வி. சங். ஊழியர்கள். தைய. ப. நிலை, மயூரன் கல்வி கூடம், செஞ்சிலுவைச் சங்கம்.

★ கொடிகாமம் — ரயில் நிலைய அருகில், விடத்தற்பளை கிராமி கடற்றொழில் சங்கம், கெற்பேலி மேற்.

★ சாவகச்சேரி — மணம் குணாய் பிள்ளையார் கோயில் முன்றிலில் சாவகச்சேரி நகர், சரசாலை, நுணாவில், மட்டுவில், மீசாலை மேற்கு தையல் நிலையம், சிலன் கல்வி நிலையம், கேம்பிறிஜ் கல்வி நிலையம், பருத்தி கல்வி நிலையம்.

★ கைதடி — கைதடி சந்திக்கு அருகில், மறவன்புலோ சிற்றூர், கைதடி, நாவற்குழி தெற்கு ச. ச. நி., கைதடி நாவற்குழி மாதர் சங்கம், எவரெஸ்ட் கல்வி நிலையம், கலைமகள் கல்வி நிலையம்.

**தீவகக் கோட்டம்**

★ நல்லூர் கோயில் முன்றிலில், தீவக தச்சுத் தொழிலாளர் சங்கம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம், அ. பராசக்தி வித்தியாலயம், புங்க. அம்பாள் விளையாட்டு சங்கம்.

**சிரமதானங்கள்**

நாளை சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

★ புத்தூர் அக்காச்சி குடியிருப்பு துப்புரவு செய்தல்.

★ உடுப்பிட்டி சந்தியும் அதை அண்டிய பகுதியும் துப்புரவு செய்தல்.

★ பொலிகண்டி ஆலீப் வீதி துப்புரவு செய்தல்.

★ மயூரன் குடியிருப்பு துப்புரவு செய்தல்.

★ உடுவில் மல்லாகம் அளவெட்டி வீதி துப்புரவு செய்தல். (த)

# இந்தியப் படையின் அக்கிரமத்தை உலகுக்கு உணர்த்தியவன் திலீபன்

## உண்ணாவிரத நிகழ்வில் உரை

சுன்னாகம், செப். 24

தியாகி திலீபன் ஓர் இலட்சிய வேங்கை தனது தலைவனையும் இம்மண்ணையும், மக்களையும் நேசித்து 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து இந்திய வல்லாதிக்க அமைதிப்படையின் அக்கிரமத்தை இந்த மக்களுக்கும், உலகுக்கும் வெளிப்படுத்தியவன்.

தியாகி திலீபனின் நினைவாக சுன்னாகம் கதிரமலை சிவன் கோயில் முன்றிலில் கடந்த புதன் நடைபெற்ற உண்ணா நோன்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆர். மகேஸ்வரன் இவ்வாறு சொன்னார்.


அவர் மேலும் தனது உரையில் கூறியதாவது:

சேர். பொன் இராமநாதன் போன்ற எமது முன்னோர்கள் தம்மைத் தேசியவாதிகள் என்று கூறிச் சென்ற சிங்கள மக்கள் தொடர்ந்தும் அவ்வாறே செய்வார்கள் என்று கனவு கண்டு, எமக்கென்று ஓர் நாடு வேண்டும் என்ற சிந்தனை இன்றி வாளாவிருந்ததாலேயே நாம் இன்று போராட வேண்டியுள்ளது.

எனவே நாமும் அவர்களைப் போல் இல்லாது திலீபன் காட்டிய பாதையில் ஓர் அணியின் கீழ் ஒன்று திரண்டு தமிழீழம் காணப் போராட வேண்டும் என்றார்.

சுன்னாகம் அளவெட்டி ப. நோ. கூ. சங்கம், உரும்பராய் இந்து ஆசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

31ஆம் நாள் நினைவலைகள்



திருமதி

சின்னாச்சி வேலுப்பிள்ளை

மலர்வு! 22 — 11 — 1910

உதிர்வு! 26 — 08 — 1993

கார்முகிலின் கருணைதனைக் கருத்திற் தேக்கிக்
காலமெலாம் கடைத்தேறக் காத்து நின்றாய்
மார்பினிலே மணமென்றும் மகிழ்ந்து வீச
மாதனத்தில் மாண்புடனே வாழ்ந்த சோதாய்!
பார்தனிலே பண்புடனே இன்ப மெல்லாம்
பரவிடவே பக்குவமாய் நீ ஒளிர்ந்து
சேர்ந்திட்டாய்; இறைவனின் சீரடிக் கீழ்
சீர்த்திபெறவே; நாளும் சிந்தை நொந்தோம்.

பிரிவுத் துயரால் பெருநோயுறும்:
மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

புலோப்பளை,
பளை.

(27411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று 25-9-1993 யாழ்ப்பாணம்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீடு கட்டுவதற்குரிய 5½ பரப்புக் காணி கொடிகாமம் சந்தைக்கு அண்மையில் கண்டி றோட்டில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. தில்லையம்பலம், 87, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (27399)

நல்ல நிலையிலும் தற்போது பாவனையிலுள்ளதுமான ஹண்டர் (Hunter) துவிச்சக்கர வண்டி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. சத்தியபாலா தில்லைகட்டி ஒழுங்கை, சுன்னாகம். (6662)

### இதோ: 04

மாற்றம் மக்கள் சஞ்சிகையின் ஆடி - புரட்டாதி இதழ் இன்னும் சில தினங்களில் சிறுகதை, கவிதை மற்றும் கட்டுரைகளுடன் வெளிவருகின்றது. ரூபா 10/-. (27403)

### விண்ணப்பப் படிவம்

இலங்கை மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான படிவம் விற்பனையாகின்றது. விவரம் எம்மிடம் பார்வையிடலாம். நாயகன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய், பூபாலசிங்கம் புத்தகசாலை, மகிமலன் புத்தகசாலை. (6503)

### தேவை

சியாக்காய் பவுடர், பற்பொடி, நீலம் மற்றும் எமது தயாரிப்புக்களை சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்றீஸ், பாடசாலை வீதி, ஆதாரமடம், ஆனைக்கோட்டை. (27393)

### ஆண்டு 4 வகுப்பு

ஆண்டு 4 (புலமைப் பரிசில் 1994) மாணவர்களுக்கு சனி ஞாயிறு வகுப்புகள் சனி 8-00 - 11-00, ஞாயிறு 2-00 — 5-00 நடைபெறும். மாதாந்தப் பரீட்சைகளும் நடைபெறும். ஆரம்பம் 25-09-93 சனி 8-00 மணி புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27401)

### PITMAN

Business Commercial Type - Writting புத்தகம் மலிவு விலையில் உண்டு. வியாபாரிகளுக்கு கழிவு விலையில் வழங்கப்படும். மகிமலன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-6114)

### புலமைப் பரிசில் பரீட்சை

1994 புலமைப் பரிசில் மாணவர்க்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்படும் தொடர் பயிற்சிப் பரீட்சையின் 11ஆவது பரீட்சை 25 - 09 - 93 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி யாழ். இந்துக் கல்லூரி அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27406)

### ENGLISH

G. C. E. (O/L) [Paper-Class], Spoken - English, with Grammar, G. A. Q. (E. S. L.) ஆகியவற்றிற்குரிய விசேட ஆங்கில வகுப்புக்களின் புதிய பிரிவுகள் 25 - 9 - 93 ஆரம்பமாகின்றன. R. சிவலிங்கம், (Dip-in-Eng.) புதிய ஆங்கில கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம். (சி-6130)

---

## பூசகர் தேவை

கொக்குவில் கிழக்கு, கோணாவளை
ஞவைரவர் சுவாமி கோயிலுக்கு

தினசரி இரண்டு வேளைப் பூசை செய்வதற்கு ஆசாரமுள்ள ஒரு பூசகர் தேவை. விருப்பமுடையவர்கள் 25-09-1993 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கும் 6-00 மணிக்கும் இடையே ஆலயத்திற்கு நேரடியாக சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சம்பளம் மற்றும் நிபந்தனைகள் என்பன பேசித் தீர்க்கப்படும்.

— ஆலய நிர்வாக சபை.

(27410)

---

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

நேரம்: பிற்பகல் 2.00 மணி
காலம்: வெள்ளிக்கிழமை 24 – 09 – 1993

பிரதம விருந்தினர்:
திரு. இரா. சுந்தரலிங்கம்

பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை)
தங்கள் நல்வரவை நாடி நிற்கின்றோம்.

மாணவர், ஆசிரியர்கள், அதிபர்.

(சி-5959)

---

## நினைவலைகளின் 4ஆம் ஆண்டில்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 25 – 12 – 1919 | 07 – 10 – 1989 |

### அமரர் வைரமுத்து குமாரசாமி
(ஓய்வு பெற்ற தபாற்கந்தோர் சேவையாளர்-வேலணை)

கணப் பொழுதில் காணும் உங்கள் திருமுகம்
காலத்தின் கோலத்தால் அழிந்ததுவோ
கலங்குகின்றோம்! கதறுகின்றோம்!
காலத்திற்கு இது புரியாதோ!
மைந்தர்கள் மனமொடிய,
மனைவி தானும் திறகொடிய
மண்ணுலகை விட்டு விண்ணுலகம்
சென்றது ஏன் ஐயா!
மனம் வந்து நீரும் சென்றீரோ!

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

சிங்கம் லேன்,
உடுவில். (6502)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 08 – 10 – 1928 | 24 – 09 – 1991 |

### முடியப்பு அந்தோனிப்பிள்ளை
(மயிலிட்டி)

தாயைப் பிரிந்த கன்று தவித்தே அழுமாப் போல் தந்தையைப் பிரிந்து நாம் தவிக்கின்றோம் - பேரன்பே பிரிந்தும்மை வாழ்வோமோ பிரியபிதாவே உங்கள் திருமுகம் இனி எப்போ காண்போம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

8ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை. (27405)

---

## 31ஆம் நாள் அந்தியேஷ்டி அழைப்பு



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 29 – 03 – 1929 | 26 – 08 – 1993 |

### சிவசுப்பிரமணியம் மீனாட்சிசுந்தரம்
(ஓய்வுபெற்ற அஞ்சல் ஊழியர்)

நாளை (25 — 09 — 1993) நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேஷ்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெறும் விருந்து உபசாரத்தினையும் ஏற்றுச் செல்லுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
குடும்பத்தவர்.

ஊறணி மடத்தடி,
வல்வெட்டித்துறை. (27408)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்டவரும்; கொழும்பு - 11, SH. ரெக்ஸ்ரைல்ஸ் பங்காளருமான

| | | தோற்றம்: |
|---|---|---|
| அமரர் சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி (முருகவேள்) | | 18 – 11 – 1954 |
| அவர்தம் அன்பு மனைவி மனோராணி (பெற்றி) | | 24 – 11 – 1956 |
| அன்புக் குழந்தைகள்: துஷிபா, | துவேதா, | துளசி |
| தோற்றம்: 31 – 10 – 1986 | 27 – 05 – 1991 | 27 – 05 – 1991 |

மறைவு: 10 _ 08 _ 1993

"அன்பினால் சொரிந்தெம்மை ஆண்டு கொண்டீர்
பண்பினை இது வென்று காட்டி நின்றீர்
விண்பால் விரைந்த நாள் தொட்டு நொந்து
கண்ணீரால் தாரைவார்த்து அஞ்சலித்தோம்"

10 — 08 — 1993இல் கிளாலிக் கடற்பரப்பில் இறைவனடி சேர்ந்த எம் அன்புக்குரியோரின் மரணச் சடங்கில் நேரில் கலந்தும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எம் துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும், பல்வேறு உதவியும், ஒத்தாசையும் புரிந்த யாபேருக்கும் மற்றும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்து பிரார்த்தித்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சி. மகேஸ்வரமூர்த்தியின் தாயார் மற்றும்
உடன் பிறப்புக்களும், குடும்பத்தாரும்.
சரவணை கிழக்கு, வேலணை - 9.

ம. மனோராணியின் தந்தை மற்றும்
உடன் பிறப்புக்களும், குடும்பத்தாரும்.
கச்சாய் வீதி, சாவகச்சேரி

(27888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொலரா' நோய் பரவுகிறது; நேற்றும் 12 பேர் அனுமதி

## யாழ். கைதடியில் நோய் தாக்கம் அதிகம்

யாழ்ப்பாணம், செப். 24

வாந்திபேதி (கொலரா) நோயினால் பாதிக்கப்பட்ட மேலும் 12 பேர் நேற்று யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றைய யாழ். ஆஸ்பத்திரி பதிவேட்டின்படி யாழ்ப்பாணப் பகுதியிலும், கைதடிப் பகுதியிலும் கொலரா பரவி வருவதாகத் தெரியவருகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் எட்டுப்பேரும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 4 பேரும் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையில், கொலராவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர சேலைன் மற்றும் மருந்து வகைகளை உடனடியாக கொழும்பில் இருந்து எடுத்துவர யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளை மறுதினம் மீண்டும் வரும் குமண கப்பலில் ஒரு தொகுதி மருந்து அவசரமாக எடுத்து வரப்படும் என்று யாழ் ஆஸ்பத்திரியின் நிர்வாக அதிகாரி திரு. ஆர். பத்மநாதன் தெரிவித்தார்.

(ஒ-15-17-117)

## மத்தியஸ்தர் வகுப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 24

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தால் பிரதி ஞாயிறு தோறும் யாழ் இந்துக் கல்லூரியில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் ஞாயிறன்று நடைபெற மாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய பயிற்சி வகுப்பு எதிர் வரும் 30 ஆம் திகதி வேலைநாள் விடுமுறை அன்று முற்பகல் 10. மணிக்கு நடைபெறும் என்று- தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-20-5)

## உதயன்

## பாலைவனத்தில் பயிர் விளையுமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து சிபார்சு செய்வதற்கென உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது இறுதி அறிக்கையைத் தயாரித்து விட்டது. அடுத்த மாதம் தனது அறிக்கையைச் சபாநாயகரிடம் கையளிப்பதோடு அது செத்துப் போய் விடும்!

தெரிவுக் குழுவிடம் இருந்து தான் ஏதோ பெரிதாக எதிர்பார்ப்பதாகவும், அதன் சிபார்சுகள் கிடைத்த ஒரு சில நாட்களுக்குள்ளேயே இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்றும் பிரேமதாசா கூறிவந்த அளவிலாவது வெளிஉலகம் அதனை ஒரு பொருட்டாக அப்போது பார்த்து வந்தது.

ஆனால் இப்போது...? அது அர்த்தமற்ற ஒன்றாக, எவருமே திரும்பியும் பார்க்காத "பொருளாகி"ப் போயிற்று! இனப்பிரச்சினை என்ற ஒன்று இலங்கையில் இல்லை என்று ஜனாதிபதி கூற, பிரதமரும் அதனைத் திருப்பிச் சொல்ல ஆளுங்கட்சியும் அதனை ஆமோதித்து ஏற்றுக் கொண்ட பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டுபிடித்ததும் அதற்கென ஒரு குழு இயங்கலும் எவ்வாறு பொருத்தம்?

தெரிவுக் குழுவையும், அதன் சிபார்சுகளையும் அரசு பொருட்படுத்துமாயின் விஜேதுங்காவின் இனப்பிரச்சினை இல்லை என்ற அற்புதமான புதிய நிலைப்பாடு அடிபட்டுப் போய் விடும்!

மொத்தத்தில் தெரிவுக் குழுவை தமிழர்கள் ஆரம்பத்திலிருந்தே பொருட்படுத்தவில்லை. அது பயிர் விளையாப் பாலைவனம் என்றே மதிப்பிட்டார்கள். அதன்மூலம் சில துகள்களையாவது பெற முடியும் என்று கருதிக் கலந்த கொழும்புத் தமிழ்க் குழுக்களும் ஏமாந்து போய், வெளியேறி விட்டன.

விஜேதுங்கா அரசு தெரிவுக் குழுவின் சிபார்சுகளையோ, யோசனைகளையோ ஏற்றெடுத்துப் பார்க்கும் நிலையிலும் இல்லை. தெரிவுக்குழு சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை அப்படியே குப்பைத் தொட்டிக்குள் போய்விடும்.

எனினும் இங்கே ஒன்றைக் குறிப்பிடுதல் அவசியம். சிங்களவர்கள் — சிங்களத் தலைவர்கள் — தமிழர் பிரச்சினையை எவ்வாறு, எந்த விதத்தில் தீர்க்க விரும்புகிறார்கள் என்பதை தெரிவுக் குழுவின் அறிக்கையில் உள்ள பிரதான சிபார்சுகள் புலப்படுத்துவதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

பொதுவாக, கேட்பதில் ஒரு பகுதியையேனும் கொடுப்பது தான் தீர்வு. ஆனால் உள்ளதையும் இல்லாமற் செய்து அதனைத் தமிழன் மீது திணிப்பது தான் தீர்வு என்பதே சிங்களவன் தீர்வுக்குக் கொடுக்கும் வரைவிலக்கணம். இத்தகைய சிங்களத் தலைவர்கள் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை எட்ட எப்போதுமே அனுமதிக்கப் போவதில்லை. அதாவது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற நகர்த்த முடியாத நிலைப்பாடு அவர்களிடம் உண்டு. எனவே தமிழர்களும் தமது இராணுவ பலத்தைப் பெருக்கியே சிங்களவரை நகர்த்தவேண்டி உள்ளது. தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு தமக்குரிய நாட்டை தாமே உருவாக்குவது தான் தமிழருக்குள்ள ஒரே வழி. வேறு எவ்வழி சிந்திப்பதாலும், செயற்படுவதாலும் அடிமை நிலையே தேறும்!

## தியாகி திலீபன் நினைவு:

## நூல் நிலையம் திறப்பு; வர்த்தகர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 24

தியாகி திலீபன் ஞாபகார்த்த நூல் நிலையம் ஒன்று யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து திலீபன் ஞாபகார்த்தக் கூட்டம் நடைபெறும்.

o o o

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் இன்று வெள்ளிக்கிழமை மூடப்பட்டிருக்கும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. மு. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

ப.நோ.கூ.ச. ஊழியர்கள் நல்லூரில் நடைபெறும் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பொருட்டே கிளைகள் இன்று மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

o o o

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் தியாகி திலீபன் நினைவு எழுச்சி விழா சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

o o o

தியாகி திலீபனின் நினைவாக அச்சுவேலியில் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உண்ணா நோன்பு நடைபெறவுள்ளது.

அச்சுவேலி மகிழடி நரசிங்க வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ள உண்ணாவிரதத்திற்கான ஏற்பாடுகளை அச்சுவேலி வர்த்தகர் சங்கம் செய்துள்ளது.

வர்த்தகர்கள், அச்சுவேலிக் கொத்தணிப் பாடசாலைகளின் மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பர்.

உண்ணாவிரதத்தை முன்னிட்டு அச்சுவேலிப் பகுதி வர்த்தக நிலையங்கள் இன்று வெள்ளிக்கிழமை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டது. (அ-152-17-11)

## திலீபனுக்கு அஞ்சலி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மண்டைதீவு கொத்தணிப் பாடசாலை மாணவ-மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் யாழ். சத்திரத்துச் சந்தியில் இருந்து நல்லூர் வரை ஊர்தி ஊர்வலம் நடத்தினர்.

### தொடர் உண்ணா நோன்பு

புலிமாமா நாவேந்தன் நேற்றுத் தமது நான்கு நாள் உண்ணா நோன்பை ஆரம்பித்தார். இவர் சென்ற வருடமும் மூன்று நாட்கள் நீராகாரமின்றி உண்ணாநோன்பிருந்தது குறிப்பிடத்தக்கது.

### குருநகரில்

குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த இளைஞர்கள் அறுவரும் தமது தொடர்உண்ணாவிரதத்தின் 48மணி நேரத்தை நேற்று மாலை ஆறு மணிக்குப் பூர்த்தி செய்து அதனைத் தொடர்கின்றனர்.

### கொழும்புத்துறையில்

கொழும்புத்துறை, மணிப்புரி ஆகிய இடங்களில் நடைபெற்ற அடையாள உண்ணாவிரத நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்குபற்றினர்.

### வடமராட்சியில்

வடமராட்சியின் எல்லாப் பகுதிகளிலும் திட்டமிட்டவாறு உண்ணாவிரத நிகழ்வுகளும், சிரமதானங்களும் நடைபெற்றன. கோட்ட ரீதியாகவும், கடற்புலி பிரதேச ரீதியாகவும் நடைபெற்ற நினைவு நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.

ஆங்காங்கே எழுச்சி நாடகங்கள், தெருக் கூத்துகள் என்பனவும் பரவலாக நடைபெற்று வருகின்றன. மாணவர்களுக்கான திலீபன் நினைவுப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

### வலி. வடக்கில்

மல்லாகம் இலங்கோவிலில் உள்ள உண்ணாவிரதப் பந்தலில் இடம்பெற்ற நிகழ்வில் மல்லாகம், வர்த்தலைவிளான், ஊரெழு, உரும்பிராய் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அவ்வப் பகுதி மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். உண்ணாவிரத முடிவில் நினைவுரைகளும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

### நீர்வேலியில்

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவில் உண்ணாவிரத நினைவுப் பந்தலில் நேற்று முன்தினம் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் வாதரவத்தை ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவ மாணவிகளும், ஆசிரிய ஆசிரியைகளும் முரளி சனசமூக நிலையம் ஆவரங்கால், பாரதி சனசமூக நிலையம் புத்தூர் ஆகியவற்றின் உறுப்பினர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

கலை பண்பாட்டுக் கழகத்தினரது வில்லுப்பாட்டு, கவிதை நிகழ்ச்சிகளும், மாணவ மாணவிகளின் கவிதை, உரை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

### தென்மராட்சியில்

தென்மராட்சி சிற்றூர்தி சங்கங்களின் தியாகி திலீபனின் உருவப் படம் தாங்கிய தேர் காலை பளையிலிருந்து கண்டி வீதி வழியாக ஊர்வலமாக சாவகச்சேரிக்கு கொண்டுவரப்பட்டது.

வழி நெடுகிலும் குத்து விளக்கு வைக்கப்பட்டு உருவப் படத்திற்கு பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். தேருடன் திலீபனின் [illegible] குறிக்கும் காவடிகளும் ஊர்வலமாக வந்தன.

(அ-15-17-30-89-13-173-110-51-117)

## பழனி இடைத்தேர்தல்:

## வாக்குகள் எண்ணும் பணி ஒத்திவைக்க உத்தரவு

தமிழ்நாடு—பழனி நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படுவது தேர்தல் ஆணையாளரிடம் இருந்து மறு உத்தரவு வரும் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வாக்களிப்பு தினத்தன்று சட்டவிரோதமாக வாகனங்களில் வாக்காளர்களை ஏற்றி வாக்களிப்பு நிலையங்களில் இறக்கியது தொடர்பாகச் சமர்த்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி தேர்தல் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் விசாரணை நடத்தினார்.

அவரின் அறிக்கை குறித்து தேர்தல் ஆணையாளர் முடிவெடுக்கும்வரை வாக்குகள் எண்ணப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி இடைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படுவது நேற்று ஆரம்பமானது.

தேர்தல்முடிவு இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-ஏ-த)

### ஒரேயொரு தமிழர்

உள்ளூராட்சி சேவை இறைவரி மேற்பார்வையாளர் தரம் 1க்கு உள்ளூராட்சி சேவை ஆணைக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட 17 பேரில் சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் பா. ஞானப்பிரகாசம் என்னும் ஒரேயொரு தமிழரே தெரிவாகியுள்ளார். (க-117)

## அபுசாபாவின் கொலையில் இஸ்ரேலர் சம்பந்தம்?

நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட பலஸ்தீன இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான முகமட் காஷிம் அபுசாபாவின் கொலையில் இஸ்ரேல் தீவிரவாதிகள் சம்பந்தப் பட்டிருப்பதற்குத் தம்மிடம் ஆதாரம் இருப்பதாக பாலஸ்தீன மனித உரிமைகள் சங்கம் அறிவித்துள்ளது.

பாலஸ்தீன காஸா பகுதியில் பாலஸ்தீன—இஸ்ரேல் ஒப்பந்தத்தை ஆதரித்து பொதுக் கூட்டம் ஒன்றில் பேசி சில மணிநேரத்தின் பின் அபுசாபா சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் பாலஸ்தீன மனித உரிமைகள் சங்கத்தின் தலைவராவார்.

இஸ்ரேல்—பாலஸ்தீன சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பாலஸ்தீன இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமானது அந்த வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ 5)

## திலீபா! உன் செயல்....!

உன் பெயர்

தினம் தினம் பேச வைத்து
மனதிலே ஊற வைத்து
எமது குருதியில் கலந்து
விட்டது.

உன் திடம்
பகைவரை ஓரமாக்கி
இளைஞரை வீரராக்கி
எம்மை சுதந்திர
'விசர்'ராக்கி விட்டது.

உன் உறுதி
உடும்பினை நினைக்க-
வைத்து
உடம்பினை மறக்க வைத்து
அடக்கிடும் இனம் மிரள
வைத்திடும்.

உன் வழி
எதிரியை கலங்க வைத்து
விழியினை பிதுங்க வைத்து
உலகினை வணங்க
வைத்து விட்டிடும்

உன் கனவுகள்
எம் உணர்வினை மறக்க-
வைத்து
உயிரினை துறக்க வைத்து
உரிமையைத் தான் பெறவே
செய்திடும்.

உன் தனித்துவம்
தமிழனை நிமிர வைத்து
தரணியில் மிளிர வைத்து
மகத்துவம் தன்னைத்
தேடித் தந்திடும்.

உன் தவம்
முனிவரை தோற்க வைத்து
கல்லினை கனிய வைத்து
கலங்கரை விளக்கமாக
என்றும் மிளிர்ந்திடும்.

உன் நினைவுகள்
இதயத்தை பாரமாக்கி
கண்களை ஈரமாமாக்கி
அடிமை வாழ்வை
தூரமாக்கி விட்டிடும்

உன் செயல்
சோர்வினை உலர வைத்து
எதிரியை சிதற வைத்தது
சமத்தை எளிதே மலர
வைத்திடும்.

கரவை. சூர்யா

## குளங்கள் நிறைந்தால் வளங்கள் பெருகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
10 – 4 – 1923

மறைவு:
25 – 8 – 1993

## திருமதி கந்தசாமி முத்துப்பிள்ளை

தேடுகிறோம் உம் முகத்தை
வாடுகிறோம் உம் பிரிவால்
அல்லும் பகலும் உம் நினைவால்
ஆறாத் துயரில் வேகின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

எமது அன்புத் தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், அந்தணப் பெருமக்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் உதவிகள் புரிந்தவர்கள் எல்லோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத், தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குடும்பத்தினர்

கற்குளி,
சாவகச்சேரி. (27415)

# மரண அறிவித்தல்கள்

## அருளம்பலம் குலக்கொழுந்து

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கிளிநொச்சியில் வசித்து வருபவருமாகிய அருளம்பலம் குலக்கொழுந்து 23 - 09 - 1993 இல் கிளிநொச்சியில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலத்தின் அன்பு மனைவியும், புஷ்பரெத்தினம், சோதிலிங்கம், தெய்வேந்திரமூர்த்தி (டென்மார்க்), கருணாமூர்த்தி (பிரான்ஸ்), கோணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மாசிலாமணி, இந்திராணி, வரலட்சுமி (டென்மார்க்), இந்திரேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் கிளிநொச்சியிலுள்ள அவரது இல்லத்தில் 23 - 09 - 1993 இல் நடைபெற்றன.

இவரது மறைவை ஒட்டிய துக்க நிகழ்வு கோண்டாவிலில் உள்ள அவரது உறவினர் இல்லத்தில் இன்று நடைபெறும்.

தகவல்:
ந. சிவம் (பேரமகன்)

த. நடேசபிள்ளை
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில் மேற்கு. (27412)

## செல்லப்பா தெய்வேந்திரன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த செல்லப்பா தெய்வேந்திரன் (முன்னைநாள் இ. போ. ச. சாரதி) 20-09-1993 இல் கொழும்பில் காலமானார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி பணிவாக வேண்டுகின்றேன்.

தகவல்:
கதிரித்தம்பி
(மைத்துனர்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (27409)

## தம்பு இராசமணி (ஆசாரி)

ஏழாலை மத்தியைச் சேர்ந்த தம்பு இராசமணி 23-09-1993 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் கந்தசாமி, சின்னராஜா, விமலாதேவி, தேவதாஸன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (24-09-93) காலை 10-00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இ. சின்னராஜா
(மகன்)

ஏழாலை மத்தி,
ஏழாலை. (6665)

## ஆலயங்களில்

கொக்குவில் நந்தாவில் சந்தி புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கம்பன் கழகத்தைச் சேர்ந்த திரு. ஆறு திருமுருகனின் சமயச் சொற்பொழிவு இடம் பெறும். (த)

o o o

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிமாலை 3 மணியளவில் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் டி. எம். வேதாரணியம், சி. நரைத்தினம் ஆகியோரின் பண்ணிசை இடம்பெறும். (த)

o o o

கொழும்புத்துறை, செப். 24
கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதி புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளி மாலை 4 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு டேவிற் அடிகளாரினால் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கப்படும். (இ-30)

## இன்று

யாழ். விற்பனைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'உணவுப் பொருள், காய்கறி வகை விற்பனை நிலையம்' ஒன்று இன்று வெள்ளி காலை 9 மணிக்கு பரனிப்பாய் ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைக்கப்படும். (த-90)

o o o

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு தியாகி திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவுப் போட்டிப் பரிசளிப்பு நடைபெறும். இதில் மாணவர் அமைப்பின் வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆ. இதயன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். (க)

o o o

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை நாட்டில் அமைதி வேண்டி அடியவர்கள் பல்வேறு ஆலயங்களில் இருந்து பால் எடுத்துவந்து அபிஷேகம் செய்து பிரார்த்தனை நடத்தவுள்ளனர். (க-28)

o o o

யாழ்ப்பாணம், செப். 24
திவ்ய ஜீவன சங்கத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சிதானந்தஜி அவர்களின் 78 ஆவது ஜெயந்தி விழா இன்று வெள்ளி பிற்பகல் 4 மணிக்கு யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படும். (இ)

o o o

கோண்டாவில் கிழக்கு மாசிமைந்தர் மன்றத்தின் கௌரவிப்பு விழா, இன்று வெள்ளி இரவு 7.30 மணிக்கு நடைபெறும். விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## பயிற்சி நெறி

சரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் உடை அமைத்தல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதிபர் இ. விஜயரத்தினம் அறிவித்துள்ளார். (க-80)

## ஸ்ரீலங்கா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மரபினுள் தவறுதலாகச் செல்லும் தமிழக மீனவர் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருவது மோசமான நிலைமை ஏற்படுத்தியுள்ளது—

கடந்த செவ்வாயன்றும் தமிழக மீனவர் ஒருவர் ஸ்ரீலங்கா கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் [illegible] நிலைமை மோசமாகும் —என்றும் ஜெயலலிதா தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-த-5)

## கடந்த மாதம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்த அனுபவமிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். படையினரின் பலமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

யுத்த முனையில் திறமை காட்டும் படையினருக்கு உடனடியாகப் பதவி உயர்வும் வழங்கப்படும். சாதாரண சிப்பாய் கூட இப்பதவிஉயர்வு பெற உரித்துடையவராகின்றார்.

ஜனநாயகக் கட்டமைப்பின் கீழ்தான் சமாதானப் பேச்சுக்களை நடத்த அரசு விரும்புகின்றது. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோருடன் சமாதானம் பேசுவது மிகவும் கஷ்டமான காரியமாகும்

கொழும்பு மாநகரில் விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரகசியச் சேவையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குணா, பாலன் என்ற பெயர்களால் அழைக்கப்படும் கந்தசாமி லிங்கேஸ்வரன் கடந்த 6ஆம் திகதி கொழும்பில் கைது செய்யப்பட்டார்.

லலித் அத்துலத்முதலியைக் கொல்வதற்காக குருநகரைச் சேர்ந்த ரமேஷ் என்பவரும் சென்றதாக கொழும்பு பிரதம நீதிவானிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கந்தசாமி லிங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

லலித்தைக் கொலைசெய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்ட விஷயத்தை தாம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நீலன் மூலம் அறிந்ததாகவும் அவர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் ரமேஷின் சடலத்தை தான் பத்திரிகை மூலம் அடையாளம் கண்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்

இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். (இ-ஏ)

# முக்கிய அறிவித்தல்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் அடங்கிய, சுன்னாகம் வர்த்தகர் சங்கம், ஊழியர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம் ஆகியன இணைந்து நல்லூர் வீதியிலே ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து ஈகைச்சாவைத் தழுவிக்கொண்ட தியாகி லெப். கேணல் திலீபனை நினைவு கூரும் முகமாக, ஆறாம் ஆண்டின் பதினோராம் நாளான 25 09-93 சனிக்கிழமை சகலதுறை வர்த்தகர்களும், மேற்படி சங்கங்களின் உறுப்பினர்களும் தங்களது ஸ்தாபனங்களைப் பூட்டி சுன்னாகம் வர்த்தகர் சங்க காரியாலயத்திற்கு சுன்னாகம் சந்திக்கு அருகாமையில், காலை 7 00 மணிக்கு ஒன்றுகூடி ஊர்வலமாக புறப்பட்டு சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தைச் சென்றடைந்து ஆலய முன்றிலில் அடையாள உண்ணா விரதம் ஆரம்பிக்கப்படும். அனைவரும் இவ் உண்ணா விரதத்தில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சங்கங்களின்
நிர்வாகிகள்.

(இ/2030.

ஓம் சாயிராம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
14
—
08
—
1971



உதிர்வு:
05
—
10
—
1992

திதி:- 24-09-1993

அமரர்

## குமாரசாமி இராஜேஸ்வரன்

(சிவாஸ் கிறீம் ஹவுஸ்)

21 வருடங்களாக எம்முடன் ஓடி ஆடி அன்புப் பிணைப்பாய் வளர்ந்தவனே! காலங்கள் ஓடி மறைகிறது. உன் கனிவான புன்னகை பூத்த முகத்தை மறக்க முடியவில்லை அன்பனே!

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றாது தேகக் கூட்டை விட்டு நீங்கிய எம் அன்பானவனே. ஆத்மா அழிவதில்லை. உன் தோற்றந்தான் மறைந்தது. இந்த மகத்தான உண்மையை அறிந்து ஆறுதலடைகிறோம். ஈஸ்வர சித்தத்தை யார்தான் உணரவல்லார். உன் ஆத்மா மீண்டும் பிறவாது பேரானந்தப் பெருவுலகினைச் சென்றடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பான அம்மா, உடன்பிறப்புக்கள்,
அண்ணிமார், பெறா மக்கள்,
சுற்றத்தார், நண்பர்கள்.

கோவில் வீதி.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (27414)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org